# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
## வழக்கு எண்: CC 44/2021

**வழக்கு சாட்சி :PW5(LW13)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உஷாநந்தினி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | காவல் ஆய்வாளர்,பெட்டவாய்தளை காவல் நிலையம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

Solemnly affirmed by Thiru. Veeramani, JA of this Court in
accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜர்)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 02nd day of July 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்</u>** – சாட்சி தற்பொழுது திருச்சி மாவட்ட பெட்டவாய்தளை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக வேலை செய்து வருவதால் தற்பொழுது நீதிமன்றத்தில் அஜராவதற்கான சூழ்நிலை இல்லை என தெரியவருவதால் இவ்வழக்கில் சாட்சிகளை விசாரிக்க தாமதமாகுவதை தவிர்ப்பதற்காக பட்டியல் சாட்சி –13 உஷாநந்தினி சாட்சியத்தை நீதிமன்றத்தில் காணொளி காட்சி மூலம் குற்றவியல் நடைமுறை விதி 51ன் கீழ் இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது. பட்டியல் சாட்சி –13 ஐ இலுப்பூர் காவல் நிலைய போலிசாரும், நீதிமன்ற காவலருமான திரு.ராதாகிருஷ்ணன் , இரண்டாம் நிலை காவலர் எண். 862 என்பவரின் முன்னிலையில் நீதிமன்றத்தின் முன்பாக அடையாளம் காட்டப்பட்டார். பட்டியல் சாட்சி – 13 அளிக்கும் சாட்சியங்களை அவர் நீதிமன்றத்தில் உள்ள சாட்சியங்களை பதிவு செய்யும் கணினித் திரையை உடனுக்குடன் பார்க்கும் வகையில் திருமதி.உஷாநந்தினி என்பருக்கு காணொலி காட்சி மூலம் காண்பிக்கப்பட்டு ஒவ்வொரு கேள்வியும் அதற்கான பதிலும் அவரிடமிருந்து உறுதி செய்யப்பட்ட பின்னரும், எதிரியின் வழக்கறிஞர் திரு.ரெங்கசாமி அவர்களின் முன்னிலையிலும், பின்வரும் சாட்சியங்கள் பதிவு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சி –13 காணொளி சாட்சி அளிக்கும் போது அவருக்கு அருகாமையில் யாரும் இல்லை. சாட்சி யாருடைய தூண்டுதலிமின்றி சமிக்கைகள் இன்றி சுதந்திரமாக அவர் சாட்சியம் அளிக்கிறார் என்று இந்நீதிமன்றம் உறுதி செய்யப்பட்ட பின்னர் பட்டியல் சாட்சி –13 யை காணொளி காட்சி மூலம் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

( சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது)

**முதல் விசாரணை :–**

**1)** நான் தற்பொழுது பெட்டவாய்தலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 2021 ஆம் ஆண்டு இலுப்பூர் காவல் நிலையத்தில் நான் ஆய்வாளராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்த குற்ற எண் 2/2021 என்ற வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று காலை 6.15 மணி அளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் பழனிசாமி மற்றும் சேவியர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3**) இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்த நபரின் பிரேதத்தை கைப்பற்றி சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரனை செய்தேன். (**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை வாகன ஆய்வாளர் சசிகுமார் என்பவருக்கு மோட்டார் வாகனங்களை ஆய்வுக்கு அனுப்பி அவரிடமிருந்து சான்று அறிக்கை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த மோட்டார் வாகன அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பின்னர் இறந்துபோனவருக்கு பிரேத விசாரணை செய்த மருத்துவர் சுதர்சன் என்பவரை விசாரித்து, அறிக்கை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) பின்னர், சம்பவம் உண்மை என தெரிய வந்து, எதிரியை தேடி வந்த நிலையில், நிலையம் ஆஜரான எதிரியை தக்க குற்றகாரணம் கூறி கைது செய்து, தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக அதே சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி**

1. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் பாலம் என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் TVS xl வாகனத்தில் சென்றார் என்றால் சரிதான். எதிரியின் வாகனமான பேருந்தை விபத்தில் இறந்த நபர் தனது xl வாகனத்தில் முந்தி செல்லும்போது விபத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. எதிரியின் வாகனத்திற்கு பின் தான் விபத்தில் இறந்துபோனவர் சென்ற வாகனமும், சாட்சிகள் 2,3 ஆகியோர்களின் வாகனங்களும் சென்றன என்றால் எதிரியின் வாகனம் எதிர்புறமாக வந்தது. எதிரியின் வாகனம் எதிர்புறமாக வந்தது என்று முதல் தகவல் அறிக்கையிலோ, இறுதி அறிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

2. சம்பவம் நடந்த பாலம் உள்ள சாலை மிகவும் குறுகலானது என்றால் இல்லை, ஓரளவு அகலமானது. பாலத்தின் இருபுறமும் பள்ளம் உள்ளது என்றால் சரிதான்.

இறந்துபோனவரின் வாகனம் வந்துகொண்டிருந்தபோது எதிரே ஒரு ஆணும், பெண்ணும் வந்த இருசக்கர வாகனம் பழுதாகி நின்றுகொண்டிருந்ததாக அ.சா.1 தனது புகாரிலும், போலீஸ் விசாரணையிலும், மற்றும் சாட்சி பட்டியலில் கண்ட சாட்சிகளும் தங்களின் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. அ.சா.1 , விபத்தில் இறந்தபோன தனது கணவரை மருத்துவமனையில் பார்த்ததாகவும் தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும், சம்பவயிடத்தில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரிதான்.

3. உண்மையில் விபத்தில் இறந்துபோனவர் எதிரியின் வாகனத்தை முந்தி சென்று எதிரே நின்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதி தூக்கிவீசப்பட்டு, எதிரியின் வாகனத்தின் சக்கரத்தில் சிக்கிகொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவரின் வாகனத்திற்கு பேருந்து ஏறியதாக சேதாரம் எதுவும் இல்லை மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் முன்பக்க இடது இன்டிகேட்டர், பூட்ரெஸ்ட், பம்பர் ஆகியவைகள் சேதாரம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தில் இறந்துபோனவர் பேருந்தின் சக்கரம் தலையில் ஏறி இறங்கியதாகதான் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி இயக்கிய பேருந்தில் எத்தனை பயணிகள் இருந்தார்கள் என்று எனது புலன் விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை.

4. விபத்தில் இறந்த நபர் தான் அவரது வாகனத்தை வேகமாக இயக்கிவந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றாலும், எதிரி பெரிய விபத்து எதுவும் நிகழாமல் தடுப்பதற்காக அவரது வாகனத்தை இயக்கிய போதுதான் விபத்தில் இறந்த நபர் எதிரியின் வாகனத்தில் விழுந்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(மேற்படி சாட்சியங்கள் என் முன்னிலையில் என்னால் காணொளி மூலம் என்ற 9842149814 எண்ணில் இருந்து இந்நீதிமன்றத்தின் Hybrid Link மூலம் தொடர்ப்பு கொண்டு சாட்சி அளித்த சாட்சியங்களை அவருக்கு மீண்டும் விளக்கி படித்து காட்டப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர் .